மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : OS 54/22

பெயர் : கனகராஜ்(DW 1)

த/பெ. : காந்தி

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the19th day of January 2024

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எங்கள் வீட்டின் தென்பகுதியில் உள்ள இடம் செல்வராஜ் என்பவருக்கு பாத்தியம் பட்டது என்றால் சரிதான்.செல்வராசிடம் இருந்து காளிமுத்து என்பவர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.காளிமுத்துவிடமிருந்து வாதி பாலமுருகன் கிரையம் பெற்றாரா என்றால் அது பற்றி தெரியாது.

2) எங்கள் வீட்டிற்கு வடப்பக்கம் ஆன்டிச்சி என்பவர் இருக்கிறார் என்றால் சரிதான்.அதற்கு கிழக்கே தாசய்யா நாயக்கர் என்பவரின் இடம் உள்ளது என்றால் வடக்கே ஒரு நாயக்கர் உள்ளார் அவர் பெயர் எனக்கு தெரியாது.வடக்கே மேல்பகுதியில் பாப்பு நாயக்கன் என்பவர் இடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.நாயக்கர் இடத்திற்கு வடக்கே கீழமேல் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

3) இந்த வழக்கை 2017 வருடம் கோவில்பட்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் வருடம் தெரியாது ஆனால் தாக்கல் செய்திருந்தார்.3.02.2017 ல் வாதி வழக்கு தாக்கல் செய்து அது OS 19/2017 என்று இருந்தது என்றால் வழக்கு எண் நினைவில்லை.அந்த வழக்கில் கோவில்பட்டி நீதிமன்றத்தில் இருந்து 10.02.2017 அன்று எனக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆவணம் 28.03.2017 ல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.நான் ஏற்கனவே மனுதாக்கல் செய்து 28.03.2018 ல் பெறப்பட்டது.முன்பே தாக்கல் செய்வதாக சொல்வதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.அவ்வாறு முன்பே தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5) நத்தம் சர்வே எண் 519/2 என் பெயரில் காட்டக்கூடிய நத்தம் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.நத்தம் பட்டா என்னிடம் கிடையாது என்றால் சரிதான்.பி.சா. 1 ஆவணம் வட்டாசிரியர் அலுவலகத்தில் பாராமரிக்கப்படுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) பி.சா.2 தீர்வை ரசீது 13.03.2017 ல் ஒரு தீர்வை ரசீதும் மற்றொன்று 18.03.2020 ம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.இரண்டு தீர்வை ரசீதுகளும் OS 19/2017 வழக்கின் அழைப்பாணை பெற்ற பின்னர் நான் வாங்கியது என்றால் அதற்கு முன்னரே நான் வாங்கிவிட்டேன்.ஆனால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தீர்வை ரசீதுகள் அழைப்பாணை பெற்றதற்கு பின்னர் தேதியில் உள்ளது என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் OS19/2017 அழைப்பாணை பெற்ற பின்னர் நான் பெற்ற ஆவணங்கள் என்றால் சரிதான்.

7) 2017 க்கு முன்னர் நான் அந்த சொத்தை அனுபவித்து வந்ததை காட்டுவதற்குரிய ஆவணங்கள் ஏதுவும் உள்ளதா அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை ஆனால் 2017 க்கு முன்னர் வீட்டு வரி ரசீதும் மின் கட்டண ரசீதும் உள்ளது.அதை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தேடி பார்த்து தாக்கல் செய்ய முடியும்.

8) வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு ஒரு மாத காலத்தில் நான் இந்த ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளேனா என்றால் சரியல்ல.வீடு தற்போது என் மனைவி பெயரில் உள்ளது.என் மனைவி பெயருக்கு எப்போது மாற்றப்பட்டுள்ளது என்று நினைவில்லை.எந்த வருடம் மாறியது என்று நினைவில்லை.ஆவணத்தை பார்த்தால் கூற முடியும்.என் மனைவியின் பெயருக்கு சொத்து மாறிய விவரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை .ஏன் சொல்லவில்லை என்றால் என் மீது தான் வழக்கு அதனால் தான் சொல்லவில்லை.

9) வீடு கட்டியதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளேன்.மேற்படி அனுமதி மற்றும் வரைபடம் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தொலைந்து போனாதால் தாக்கல் செய்யவில்லை.பஞ்சாயத்து

அலுவலகத்தில் மேற்படி ஆவணங்கள் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அழைப்பாணை அனுப்பி மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை.அதற்குரிய நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளலாமா என்றால் மேற்கொள்ளலாம்.

10) என்னுடைய எதிர் வாக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் 15.07.2011 ல் எப்போதுவென்றான் பஞ்சாயத்தில் அனுமதி பெற்றதாக எதன் அடிப்படையில் சொல்லுகிறேன் என்றால் வீடு அந்த காலத்தில் கட்டியதால் யுகத்தின் அடிப்படையில் சொல்லுகிறேன்.வீடு கட்டியவுடன் தீர்வை செலுத்திவிட்டேன்.2011–2012 ல் உள்ள தீர்வை தொலைந்துவிட்டது.தற்போது வரை நான் அந்த வீட்டிற்கு பஞ்சாயத்து அனுமதி பெறவில்லை என்றாலும் அதனால் தான் மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

11) நான் 2017 ல் தான் வீடு கட்டியுள்ளேன் என்றாலும் அதற்கு முன்பாக எனக்கு அந்த இடத்தில் அனுபவம் கிடையாது என்றாலும் சரியல்ல. நான் வீடு கட்டியிருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்குரிய ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிழ மேல் 68 அடி தென்வடல் 26 அடி சொல்லியுள்ளேனா என்றால் அனுபவத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன்.மேற்படி அளவுகளை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.என் வீட்டின் தென்பகுதியில் கீழ் பகுதி நிலம் சதிஷ்குமார் பெயரிலும் மேல் பகுதி நிலம் வாதி பெயரிலும் உள்ளது என்றால் இல்லை.செல்வராஜ் பெயரில் தான் இருந்ததது.தற்போது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

12) ஆனால் என்னுடைய எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் வாதி ஏற்படுத்தியுள்ள 17.06.2016 கிரைய பத்திரத்திலும் வாதியின் தம்பியான சதிஷ்குமார் என்பவர் மேற்படி தேதியில் காளிமுத்துவிடம் ஏற்படுத்திய கிரைய பத்திரத்திலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.கீழ்பகுதி ஒருவருக்கும் மேல்பகுதி ஒருவருக்குமாக பிரித்து பத்திரம் போடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

13) 1 வது தபசில் சம்மந்தமாக மாண்புமிகு தூத்துக்குடி கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண் 1 ல் OS 37/2014 என்று வழக்கு உள்ளதாக சொல்லியுள்ளேன்

என்றாலும் அந்த வழக்கு சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நினைவில்லை.மேற்படி வழக்கில் 1 வது தபசில் சொத்தை சேர்த்து தான் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் செல்வராஜ் மருமகன் அன்புராஜ் சொல்லி தெரியும் ,அவரிடம் ஆவணம் எதுவும் வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்துவிட்டு அவரிடம் கொடுத்துவிட்டேன்.

14)OS37/2014 வழக்கு 1 வது தபசில் சொத்தை காட்டி போடபடவில்லை என்றால் பொதுவாக சொத்தை காண்பித்து வழக்கல் தாக்கல் செய்துள்ளார்கள்.வாதி பத்திரம் ஏற்படுத்தும் போது OS 37/2017 வழக்கில் இந்த வழக்கில் 1 வது தபசில் சொத்துக்களை சேர்க்கவில்லை என்றால் வாதியின் அப்பா செல்வராஜ் அனுபத்தில் இருந்தது.

15) என்னுடைய வீடு,வாதியின் தபசில் சொத்து, என் வீட்டின் வடபுறத்தில் உள்ள நாயக்கர் வீடு,ஆகியவற்றின் மேல்பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றால் சரிதான்.அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந் மேற்படி என்னுடைய வீடு,வாதியின் தபசில் சொத்து, என் வீட்டின் வடபுறத்தில் உள்ள நாயக்கர் வீடு, ஆகியவைகளை பிரிக்கும் விதமாக கிழமேல் தார்ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக 10 அடி அகலம் 60 அடி நீளத்தில் தென்வடல் பாதை உள்ளது என்றால் இல்லை.

16) ஆரம்ப சுகாதார நிலையத்திற்க செல்லக்கூடிய மின்இணைப்பு,குடிநீர் குழாய் ஆகியவை 2 வது தபசில் சொத்து வழியாக தான் செல்கிறது என்றால் சரியல்ல.கிழமேல் ரோட்டில் தான் அவை உள்ளது.குடிநீர் குழாய் எந்த வழியாக செல்கிறது என்றால் ஆரம்ப சுகாதார நிலையத்தின் காமொண்டை ஒட்டி ஒன்றரை அடி இடைவெளியில் செல்கிறது.ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முழுவதுமாக சுற்றுசுவர் உள்ளது.

17) குடிநீர் குழாய் பல்வேறு பட்டா வழியாக செல்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.மேற்படி குடிநீர் குழாய் மதுரை டு தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் வந்து கிழக்காக திரும்பி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் தெற்காக திரும்பி செல்கிறது.

18) கிராம வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.வாதி இடத்திற்கு கீழ்பகுதியில் தென்வடல் பாதை செல்லவில்லை

என்றால் சரியல்ல.சதிஷ்குமார் இடத்திற்கு கீழ்பகுதியில் மேற்படி பாதை செல்கிறது என்றால் யாருக்கு எந்த பாகம் என்று எனக்கு தெரியாது.ஏர்டெல் டவர் வாதியின் தகப்பனார் வைத்துள்ளார் என்பதை தென்வடல் பாதை உள்ளது என்பதை காட்டுவதற்காக குறிப்பிட்டுள்ளேன்.கிழமேல் முகப்பில் மேற்படி டவர் உள்ளது என்றால் சரியல்ல.2 வது பிளாட்டில் உள்ளது.ஏர்டெல் டவர்க்கும் ஆக்கிரமிப்பு செய்திருக்கும் பாதைக்கும் சம்மந்தம் இல்லை என்றால் நான் எதுவும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

19) 1 வது தபசில் சொத்திற்கு மேற்பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் சுற்றுசுவர் உள்ளது என்றால் சரிதான்.1 வது தபசில் சொத்திற்கு தென்பகுதியிலும் வேறு நபர்களுக்குரிய கட்டிடம் உள்ளது பாதை கிடையாது என்றால் சரிதான்.கிழமேல் தார் ரோட்டில் இருந்து 1 வது தபசில் சொத்து வரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கீழ்புறம் தென்வடல் பாதை உள்ளது என்றால் இல்லை.வாதியின் தகப்பனார் காலத்தில் இருந்தே அந்த பாதை வழியாக 1 வது தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை.

20) நான் 2016 ல் வீடு கட்டினேனா என்றால் இல்லை.வீடு கட்டும் பொழுதே குளியலறை கட்டுமானம் கட்டவில்லை என்றாலும் அதன் பின்னர் கட்டப்பட்டது என்றாலும் சரியல்ல. எங்கள் வீட்டின் மேற்பகுதியில் வாதியின் பாதை என குறிப்பிடும் இடத்தில் குளியலறை புதிதாக கட்டப்பட்டுள்ளது என்று நீதிமன்ற ஆணையர் அவரது ஆணையர் அறிக்கையில் தெரிவித்துள்ளார் அதற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.ஆக்கிரமிப்பை அகற்ற கோரி வாதி என்னிடம் கேட்ட பொழுது நான் அவரது சொத்தினை குறைந்த விலைக்கு கிரையம் கேட்டேன் என்றால் சரியல்ல.வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.என்னை மிரட்டும் விதத்தில் எப்போதும் வென்றால் காவல்நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். அதை அவர்கள் வாய்மொழியாக விசாரித்தார்கள்.

21) வாதி மிரட்டி என்னுடைய வீட்டை அபகரிக்கும் விதமாக பொய்புகார் கொடுத்து காவல்நிலையத்தில் மிரட்டினார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.மேற்படி விஷயம் நடந்திருந்தால் அதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்திருப்பேனா என்றால் சரியல்ல.வாதி தகப்பனார்க்கு 15 வீடு உள்ளது என்று நான் எதற்கு தெரிவித்துள்ளேன் என்றால் வாதி தகப்பனார்க்கு 15 வீடுகள் உள்ளது எனக்கு 1 வீடு உள்ளது என்பதால் நான் அவ்வாறு தெரிவித்தேன்.வாதியின் காழ்புணர்ச்சியில் பொய்யான தகவல்களை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. வருமானத்திற்கு

அதிகமாக சொத்து சேர்த்ததாக வாதியின் மீது நான் பொய்யாக வாதி மீது தெரிவித்துள்ளேன் என்றாலும் பாதை ஆக்கிரமிப்பில் இருந்து தப்பிபதற்க்காகவும் வழக்கை திசை திருப்பதற்காகவும் அவ்வாறு தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல.நான் தான் ஆக்கிரமித்து பாதை கட்டியுள்ளேன் என்றாலும் வாதிகள் என்னுடைய சொத்தை எந்த காலத்திலும் கிரையம் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.வாதி பதிவு ஆவணங்களின் அடிப்படையில் தான் பாதை அனுபவத்தை கேட்கிறார் என்றாலும் எந்த ஆவணமும் இல்லாமல் நான் வாதியின் பாதை அனுபவத்தை தடை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

22)நான் வாதிக்கு அனுப்பி பதில் அறிவிப்பில் பொய்யான சங்கதிகளுடன் அனுப்பியுள்ளேன் என்றாலும் அதில் சங்கதிகள் உண்மை என்றாலும் சரியல்ல.என் வீட்டின் கீழ்பகுதியில் பாதை உள்ளது என்றால் சரிதான்.கீழ்பகுதியில் எனக்கு பாதை இருப்பதால் தான் நான் மேல்பகுதியில் உள்ள பாதையை அபகரித்து ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

23) ஆரம்ப சுகாதார நிலையத்தில் கீழ்பகுதியில் வடக்கே தார் ரோடு உள்ளது என்றாலும் அதன் நேரே வடக்கே பாதை உள்ளது என்றாலும் சரிதான்.

(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டு விட்டது)

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.